**சியம்பலாண்டுவ பிரதேச சபை**

**மொனறாகலை மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூன் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சியம்பலாண்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 122,086,663 தொகை எனக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தொழில் தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டு தொழிலில் அங்கத்தவர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சியம்பலாண்டுவ பஸ் நிலையம் நிர்மாணிக்கப்படும் காணி ரூபா 12,000,000 தொகை பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த போதிலும் சபையினால் இந்த காணிகள் சட்டரீதியாக உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான சேதனப் பசளைச் செயற்திட்டக் காணி மற்றும் எதிமலே நூலகம் அமைந்துள்ள காணிகளின் பெறுமதிகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் உரிய தொழில் தகைமையுள்ள பெறுமதி மதிப்பீட்டு தொழிலில் அங்கத்தவர் ஒருவரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த பலவின செலவுகள் ரூபா 816,407 தொகைக்கான கடன்கொடுத்தோரின் கீழ் கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

09 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,305,720 தொகையாகக் காணப்பட்டதுடன் பட்டோலைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 25,355,497 ஆக இருந்தது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

---

2014 அக்டோபர் 24 திகதி நிரந்தர சேவைக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்த 17 உத்தியோகத்தர்களுக்காக 2014 அக்டோபர் முதல் திசெம்பர் வரை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 934,643 தொகையினை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 224,251,114 தொகைக்கான சொத்து விடயங்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 11,920,339 இற்கான பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,250,253 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,321,886 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 4,928,367 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 ஏனைய வருமானங்கள்

---

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 149 மற்றும் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி கருமங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள் / தங்குமிடங்களில் இருந்து குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய ஆண்டிற்காக பெறுகைகளின் நூற்றிற்கு ஒன்றை மிகைக்காத கட்டணம் ஒன்று துணை விதி ஆக்கப்பட்டு உள்ளூராட்சி நிறுவனங்களினால் அறவிடப்பட வேண்டும். எனினும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் ஹோட்டல்கள் / தங்குமிடங்கள் ஒன்றில் இருந்து அவ்வாறு கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152 ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு தொலைபேசி கம்பனிகளினால் 2012 ஆண்டிலேயே நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 செலுத்துகை டவர்களில் இருந்து வருடாந்த வாடகை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான WPZA-3137 கொண்ட ஜே.ஸீ.பீ. இயந்திரத்தை வாடகைக்கு கொடுக்கும் போது இயந்திரத்தை ஒதுக்குதல் மற்றும் நிதி அறவீடு செய்தல் முறைமை ஒன்று தயாரித்திருக்காமையால் 2014 மற்றும் மீளாய்வாண்டின் போது 9 நபர்களுக்கு வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக ரூபா 296,775 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 3,810,805 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,358,389 தொகையும் அறவிட வேண்டியிருந்தது.

2.2.3 கடை வாடகை

------------------------

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகையை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நடவவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 மிகை விதிப்பு

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்லவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 759,593 தொகையான மிகை விதிப்பு அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராகச் செயற்பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 335,270 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் விதம், பொருத்த வேண்டிய விளக்குகளின் வகை, எண்ணிக்கை என்பன பற்றிய கடிதத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

----------------------------------

(அ) சியம்பலாண்டுவ பஸ் நிலையம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக சபைக்கு சொந்தமான வாராந்த சந்தை மற்றும் நூலக நீர்வழங்களில் இருந்து நீர் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டு மார்ச் மற்றும் மே மாதங்கள் தொடர்பாக ரூபா 53,918 தொகை நீர்க் கட்டணத்தை ஒப்பந்தக்காரரிடம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நீர் வழங்கும் போது நீர் கட்டணம் கொடுப்பனவு தொடர்பாக குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருடன் எழுத்துமூல இணக்கமொன்றிற்கு வந்திருக்கவில்லை.

(ஆ) கம நெகும கிராமங்களிடையே அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் முது கண்டிய குடிநீர் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக 2014 ஆண்டின் போது நீர் பம்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக ரூபா 691,645 தொகையும், பீ.வி.சி நீர்குழாய்கள் மற்றும் ஏனைய பண்டங்கள் வாங்குவதற்காக ரூபா 5,911,599 தொகையும் ஆக ரூபா 6,603,244 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 பெப்ரவரி 29 திகதி வரை நீர் செயற்திட்டம் அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்திருந்த பீ.வி.சி. குழாய்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் சபை வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

3.3 மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------------------

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 71 மற்றும் 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த வேலை நிருவாகி, சாரதி, இயந்திர இயக்குனர், பாதை தொழிலாளர், காவலாளர் மற்றும் நூலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக 12 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு வெளியே நிரந்தர சேவைக்கு நியமனம் பெற்றிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டின் போது 5 பதவிகள் தொடர்பாக பதவியணியை விட கூடுதலாக 21 பேர்கள் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான தொம்பகஹவெல உப அலுவலகத்தில் 2014 ஆண்டின் போது ரூபா 1,753,562 தொகைக்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் அச்சுக் கற்கள் உற்பத்தி அலகு 2015 பெப்ரவரி மாதம் மூடப்பட்டிருந்தது.

3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் பொறியம் பொறித்தொகுதியம் பராமரிப்பு மற்றும் சேவை விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,160,578 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு சேவை பராமரிப்பு அலகு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் அதனைப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தொம்பகஹவெலவில் அமைந்துள்ள பிரதேச சபை உப அலுவலகத்தின் இலத்திரனியல் நூலகமொன்று ஆரம்பிப்பதற்காக தேவையான கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக 2012 ஆண்டின் போது ரூபா 408,200 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் இலத்திரனியல் நூலகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. முறையான செயற்பாடு ஒன்றின் மூலம் வேலை மேற்கொள்ளப்படாமையால் மேற்கொள்ளப்பட்ட செலவின் மூலம் எதிர்ப்பார்த்த இலக்கினை அடைய முடியாதிருந்தது.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்பட்ட முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

---

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

2009 ஜுன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்